### எஸ்.ஐ.ஆர். பணியை ஒவ்வொரு தி.மு.க. நிர்வாகிகளும்

# நாம் தான் வேட்பாளர்கள் என்ற உணர்வுடன் பணியாற்ற வேண்டும்!

## செஞ்சியில் நடைபெற்ற விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக அவசர செயற்குழு கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

செஞ்சி நவ 14.

எஸ்.ஐ.ஆர் பணியை ஒவ்வொரு திமுக நிர்வாகிகளும் நாம் தான் வேட்பாளர்கள் என்ற உணர்வுடன் பணியாற்ற வேண்டும் -செஞ்சியில் நடைபெற்ற விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக அவசர செயற்குழு கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர் ,அமைச்சர் எம். ஆர் .கே பன்னீர்செல்வம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக அவசரசெயற்குழு ஆலோசனைக் கூட்டம் செஞ்சியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட அவை தலைவர் டாக்டர் ப. சேகர் தலைமை தாங்கினார்.தேர்தல் தொகுதி பார்வையாளர்கள் மயிலம் தொகுதி இள.புகழேந்தி, திண்டிவனம் தொகுதி ஜாபர் அலி, மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார்,அருணகிரி ,அமுதா ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செயற்குழு உறுப்பினர்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் மண்டல பொறுப்பாளரும்,உழவர் நலன் மற்றும் வேளாண்மை துறை அமைச்சர் எம். ஆர். கே .பன்னீர்செல்வம், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர் அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் பேசுகையில்:

ஒன்றிய அரசு இந்திய தேர்தல் ஆணையத்துடன் இணைந்து தமிழ்நாட்டில்வாக்காளர்சிறப்பு தீவிர திருத்தம் (எஸ் ஐ ஆர்)பணியை மேற்கொண்டுள்ளனர்.இந்தப் பணி 20 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் ஆனால் தற்போது அறிவித்து நடைபெற்று வருகிறது நாடாளுமன்ற தேர்தலில் முடிந்த பிறகு இந்த பணியை செய்திருக்க வேண்டும் ஆனால் அதை செய்ய வில்லை . எஸ்.ஐ.ஆரைபற்றி முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் கவனத்துடன் இருந்ததால்தான் தற்பொழுது வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் ப ணி ை ய குறித்தவிழிப்புணர்வை திமுக நிர்வாகிகளுக்கு ஏற்படுத்தியுள்ளார்.எஸ் ஐ.ஆரைவைத்து கொண்டு வீடு வீடாக சென்று திமுகவினர் பிரச்சாரம் மேற்கொள்ளலாம் வீதிக்கு வீதிக்கு போகாதவன் எல்லாம் வக்கில்லாதவன் எல்லாம்அவன் அவன் ஒரு ஸ்டேட்மெண்ட் விட்டு வருகினறனர்.வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த பணியில்திமுகவினர் முத்திரை பதிக்க வேண்டும். ஒவ்வொரு திமுக நிர்வாகிகளும் தோழர்களும் நான்தான் வேட்பாளர்கள் என்ற உணர்வுடன் பணியாற்ற வேண்டும் அப்படி பணியாற்றினால் தான் வாக்காளர் பட்டியலில் நம் பெயர் நிலைத்து நிற்கும்.ஒவ்வொரு கிராமத்திலும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த பணியில் வாக்காளர் உடைய பெயர்களை சேர்ப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் .உங்களுடன் ஸ்டாலின் ,நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் மூலம் பொதுமக்களை தினமும் நாம் சந்தித்துள்ளோம் தற்போது வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த பணியின் போது மக்களை சந்தித்து முதலமைச்சரின் அனைத்து திட்டங்களையும் எடுத்துக்கூறி வாக்காளர் பட்டியலில் பதிவேற்றம் செய்ய அனைத்து நிர்வாகிகளும் விழிப்புடன் செயல்பட வேண்டும். பொறுப்பில் உள்ளவர்கள் பொறுப்பாக பணியாற்ற வேண்டும் அலட்சியம் வேண்டாம் எச்சரிக்கையாக பணியாற்ற வேண்டும் என தெரிவித்த அமைச்சர் எம் ஆர் கே பன்னீர்செல்வம்

எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் செய்த சாதனைகளை வீடு வீடாக எடுத்து சென்று கூற வேண்டும்.

கடுமையாக உழைத்தால் தான் அனைவருக்கும் தகுந்த நேரத்தில் பதவி வரும். கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் கடுமையான உழைப்பினால் தான் இன்று முதலமைச்சராக உள்ளார் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டு மக்களுக்கு தேவையான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் .விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ளசெஞ்சி, மயிலம், திண்டிவனம் மூன்று தொகுதிகளிலும் திமுக வெற்றி பெற வேண்டும் .அதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து கடுமையாக உழைக்க வேண்டும்.

ஊர் கூடி தேர் இழுக்க வேண்டும். எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டும் அப்போதுதான் எதிர்வரும்2026 ஆம் ஆண்டுநடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளிலும் திமுக வெற்றி பெறுவது உறுதியான அவர் உறுதிபட தெரிவித்தார்.

முன்னதாக விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பேசுகையில்:

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள செஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த பணியை திமுக நிர்வாகிகள் வாக்குச்சாவடி முகவர்கள் டிஜிட்டல் பூத் ஏஜெண்ட் நிர்வாகிகள் அனைத்து அணி அமைப்பாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கவனத்துடன் பணியாற்ற வேண்டும் மேலும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள நகராட்சி பேரூராட்சி ஊராட்சி வார்டுகளில் சீரும் சிறப்புமாக நடத்த வேண்டும் ஏழை மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும் மேலும் எஸ்.ஐ. ஆர்பணி மேற்கொள்ளும் போது எந்த ஒரு வாக்காளர்களும் விடுபடாமல் பார்த்துக் கொண்டு கவனமுடன் பணியாற்ற வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில்துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு செஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில்நவம்பர் 26ம் தேதிக்குள் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த பணியை முழுமையாக செய்து முடிப்பது,மேலும் நவம்பர் 27ஆம் தேதி பிறந்தநாள் விழா காணும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ளநகர பேரூர் ஊராட்சி வார்டுகளில் இருவண்ண கழக கொடியினை ஏற்றி வைத்து ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரண பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ் செல்வன், சீத்தாபதிசொக்கலிங்கம்தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, தலைமை செயற்குழு உறுப்பினர் சீனிராஜ், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் கதிரேசன், மணிவண்ணன், வீடு ரவி ,,ஒன்றிய கழக செயலாளர் சொக்கலிங்கம், அண்ணாதுரை, ராஜாராமன்,தயாளன், பழனி, ரவிச்சந்திரன், மணிமாறன், செழியன், துரை, இளம்வழுதி, பச்சையப்பன், விஜயராகவன், நாராயணமூர்த்தி,சாந்தி சுப்பிரமணியன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,,பேரூர் செயலாளர்கள் சம்பத், கார்த்திக்,திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன்,அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஆனந்த், கோபிநாத்,பிரசன்னா, திலகவதி,திருமலை, ரவிச்சந்திரன்,கே. அண்ணாதுரை ,பா. செந்தில் குமார், தமிழரசன், விஜயராகவன், ரோமியன், ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன்,மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை,செல்விராம சரவணன், அன்பு செழியன், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் அசோகன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர ,பேரூர் கழக நிர்வாகிகள், ஊராட்சி கழக நிர்வாகிகள்,அணி நிர்வாகிகள், தொமுச நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.செயற்குழு உறுப்பினர் நெடுஞ்செழியன் நன்றி கூறினார்.




ஒளிரும் ஈரோடு அறக்கட்டளையின் நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் சென்னிமலை ஒன்றியம் புதுப்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட 16 ஏக்கர் பரப்பளவு உள்ள திப்பம்பாளையம் நீர்நிலை ஆழப்படுத்தப்பட்டு, கரைகள் பலபடுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. திப்பம்பாளையம் ஏரி பணி நிறைவு விழா மாவட்ட ஆட்சித் தலைவர் கந்தசாமி முன்னிலையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. உடன் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### மு.தென்னவன் தலைமை! சிவகங்கையில் எஸ்.ஐ.ஆர்.–ஐக் கண்டித்து

# மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம்!

## எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி - கட்சியினர் பங்கேற்பு!

சிவகங்கை, நவ. 14 -

கழக தலைவர், முதல்வர் தளபதி தலைமையிலான இந்தியா கூட்டணி மதச்சார்பற்ற மூற்போக்கு கூட்டணி கட்சிகளின் தீர்மானத்தின்படி 4 ஆம் தேதி முதல் இந்திய தேர்தல் ஆணையத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் எஸ் . ஆர்.ஐ.கண்டித்து மாவட்ட தலை நகரங்களில் கண்டண ஆர்ப்பாட்டம் நடத்த தீர்மானிக்கப் பட்டது.

அதன்படி. சிவகங்கை மாவட்ட மதச் ச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் சிவகங்கை சண்முகராஜா கலையரங்கில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமையில் நடைபெற்றது. இந்த கண்டனஆர்ப்பாட்டத்தில் எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ். மாங்குடி ,மாவட்ட கழக துணை செயலாளர்கள் த.சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ ,புகழேந்தி திக. குணாஹாசன் மக்கள் நீதி மையம் ,பாலையா விடுதலை சிறுத்தைகள் கட்சி ,துல்கர்னை சேட், மனிதநேய மக்கள் கட்சி காஜாமுகைதீன் மனிதநேய ஜனநாயக கட்சி , பால்பாண்டி அதியமான் தமிழர் பேரவை, பசும்பொன் மனோகரன் ம.தி.மு.க .நாகலிங்கம் மு.மு.க. மீரான் இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மலைபாலா தமிழக வாழ்வுரிமை கழகம், என். சாத்தையா இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, கே. அர்ஜுனன் சி. பி .எம். ம.தி.மு.க.சார்பில் வெளீயீட்டு அணி இணை செயலாளர் நக்கீரன்,உட்பட ஆகியோர் கண்டன உரை ஆற்றினார்கள் .

முன்னாள் அமைச்சரும் இலக்கிய அணி புரவலருமான மு.தென்னவன் சிறப்புரையாற்றினார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏக்கள் வே .ராஜசேகரன் ,சுப. மதியரசன், எஸ் .மாரியப்பன் கென்னடி, மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வேங்கை பிரியா, மாவட்ட இளைஞர் அணிஅமைப்பாளர் நாகனி செந்தில்குமார், நகர கழக செயலாளர்கள் சி. எம் .துரை.ஆனந்த், பெரி. பாலா, கே. பொன்னுச்சாமி, மாநகர செயலாளர் நா.குணசேக ரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி. ஆர். பெருமாள், கரு. அசோகன் ,பள்ளத்தூர் கே.எஸ்.ரவி ,மதார்சேட், ஏஆர்..ஜெயமூர்த்தி, அம்பலமுத்து, ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம். ஜெயராமன், திருமலை முத்து ராமலிங்கம், மா.அண்ணாதுரை, துரை.ராஜா மணி , அ.முத்துச் சாமி, சுப்பிரமணியன், ஆறு.செல்வராசன்,

வே.தமிழ்மாறன், கா.வெங்கட் ராமன், ஆர் .எம். கென்னடி, வே. ஆரோக்கியசாமி, யோக .கிருஷ்ணகுமார், நாகனிரவி ,லெ.மு. ரவிச்சந்திரன், வே .பூபால சிங்கம் , சுப. சின்னத்துரை ,கே .எஸ். ஆனந்த் ,நா. நெடுஞ்செழியன் , குன்னக்குடி சுப்பிரமணியன், எஸ். சண்முக வடிவேல், விராமதி மாணிக்கம், கே. பாலசுப்பிரமணியன், பூமணி, பி. செல்வராஜ், பேரூர் கழகச் செயலாளர்கள் ஆர் .கார்த்திகேயன், கதிர்வேல், பிரம்மையா, அசோக், ஜெயராமன், பி. ஏ நஜ்மூதீன், நாகூர் கனி, பகுருதீன்அலி கே.பி.எஸ்.பழனியப்பன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் , மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் , மகளிரணி நிர்வாகிகள் மார்க்ரெட்கமலா , திலகவதி கண்ணன் ,தெரசா , மஞ்சுளா பாக்ய லட்சுமி விஜயகுமார், எஸ்தர் மேரி, ராஜேஸ்வரி , மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ். எஸ் .ஏ.வல்லபாய் , மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, அமைப்பாளர் சிங்க முத்து,

மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சசி வர்ணம், துணை அமைப்பாளர் காளி முத்து, மாவட்ட, இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் சிவ.முத்துவளவன், துணை அமைப்பாளர் அழகையா , மாவட்ட வழக்கறிரணிஅமைப்பாளர் எஸ். பாஸ்கரன், ஒன்றிய, பேருர், நகர், கூட்டணி கட்சி நிர்வாகிகள் தோ.மு.ச. முருகேசன், தடியப்பன், வீனஸ்ராமநாதன், ஜெயகாந்தன் , வீரகாளை , ராமதாஸ் , முருகேசன்,தி.ஞானசேகரன், சேது, ஜெயக்குமார் , அண்ணாமலை, சாகீர்உசேன், மானாமதுரை முன்னாள் ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை, மானாமதுரை நகர் மன்ற துணை தலைவர்பாலா சுந்தர் ,மாணவரணி கார்த்தி, பாஸ்கரன்,மூர்த்தி, விவசாய்அணி காளிமுத்து, ஆர்.வி.எஸ். அரங்கநாதன்,ஆர்.கோதண்டபாணி, ஒன்றிய பொருளாளர் ஏ.எம்.கண்ணன், அய்யாச் சாமி, அன்புச் செழியன், இளங்கோ, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ .டி . என் .ரவி, ஒன்றிய துணைச் செயலாளர் கள் சிவபுரிசேகர் , எஸ். முத்துக்குமார், முத்து ராமலிங்கம், மாரி, சோமசுந்தரம்,சுப.தமிழரசன், ரவிச்சந்திரன் மகேந்திரன் அச்சங்குளம் முருகன் , அலாவுதீன் ,ரவி, பன்னீர் மாவட்ட பிரதிநிதி ஒட்டுனர் ரமேஸ், இளைஞர் அணி பைரோஸ் கான், ஆகியோர் கலந்து கொண்டார்கள். கூட்டணி கட்சிகள் சார்பில் பங்கேற்றவர்கள்.

காங்கிரஸ் . மாநில பொது பொதுச்செயலாளர் பச்சேரி சி.ஆர். சுந்தர்ராஜன் மாவட்ட தலைவர் சஞ்சய் காந்தி நகரத்தலைவர் விஜய் தியாகராஜன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வழக்கறிஞர் மருது, பி .எல். ராமச்சந்திரன், எஸ். கிருஷ்ணன் , எம் .சந்திரன், சி.பி.எம் . மாவட்ட செயலாளர் மோகன், தி.க. சார்பில் வழக்கறிஞர் எஸ். இன்பலாதன், ம.தி.மு.க .பாலுச்சாமி நாகராஜன். மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

நகர் சண்முகராஜா அரங்கில் இருந்து அரண்மனை வாயில் வரை சுமார் 5ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அவரவர் கட்சி கொடிகள், பதாகைகளை ஏந்திய வாறு கலந்து கொண்டார்கள்.

எஸ்.ஐ.ஆர் .ஐ. நடைமுறைபடுத்திய இந்திய தேர்தல் ஆணையத்தை கண்டித்து மாவட்டக் கழக துணைச் செயலாளர் த.சேங்கை மாறன் முழக்கங்கள் கூற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற வர்கள் திரும்ப கூறினார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டம் முழுவதிலுமிருந்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் கலந்து கொண் டார்கள்.

முடிவில் சிவகங்கை நகர் கழகசெயலாளர் சி.எம். துரை.ஆனந்த் நன்றி கூறினார்.

### ஓய்வு பெற்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில்

# ஆணவக் கொலைகளை தடுப்பதற்கான பரிந்துரைகளை வழங்க குழு அமைப்பு!

## அரசாணை வெளியீடு – தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ. 14-

ஆணவக் கொலைகளை தடுப்பதற்கான பரிந்துரைகளை வழங்க குழு அமைத்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற நீதிபதி கே. என்.பாஷா தலைமையில் ஆணையம் அமைத்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. அரசியல் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், மக்கள் உள்ளிட்டோரின் கருத்துகளை பெற்று பரிந்துரைகளை தர ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. கே.என். பாஷா தலைமையிலான ஆணையம் 3 மாதங்களில் அரசுக்கு பரிந்துரைகளை வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணவக் கொலைகளைத் தடுப்பதற்கு அரசியல் கட்சிகள், சட்ட வல்லுநர்கள், சமூக ஆர்வலர்கள், பாதிக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மக்களிடமிருந்து கருத்துக்களைச்சேகரித்து, அதற்கேற்ப பரிந்துரைகளை வழங்குவதற்காக, சட்ட வல்லுநர்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள் மற்றும் மானுடவியலாளர்கள் அடங்கிய ஒரு ஆணையத்தை அமைப்பதாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 17.10.2025 அன்று சட்டமன்றக் கூட்டத்தில் ஒரு அறிவிப்பை வெளியிட்டனர்.

இதன் மூலம், சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதி கே.என்.பாஷா (ஓய்வு பெற்றவர்) தலைமையில் ஒரு ஆணையத்தை அமைக்கிறது. டாக்டர். வி.பழனிகுமார், ஐ.ஏ.எஸ்., (ஓய்வு பெற்றவர்) மற்றும் எஸ். ராமநாதன், ஐ.பி.எஸ்., (ஓய்வு பெற்றவர்) ஆகியோர் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாக விதிமுறைகளுடன்" நியமிக்கப்படுகிறார்கள்.

ஆணவக் கொலைகளைத் தடுப்பதற்கும் பரிந்துரைகளை உருவாக்குவதற்கும் அவர்களின் கருத்துக்களைப் பெற அரசியல் அமைப்புகள், சட்ட வல்லுநர்கள், சமூக ஆர்வலர்கள், பாதிக்கப்பட்ட நபர், பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்த வேண்டும்.

ஆணவக் கொலைகள் தொடர்பான கடந்தகாலத் தரவுகளை தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து சேகரித்து, இந்தப் பிரச்சினைக்கு பங்களிக்கும் சமூக முறையான காரணிகளை அடையாளம் காண தரவுகளை பகுப்பாய்வு செய்தல்.

ஆணவக் கொலைகளுக்கு எதிரான நடவடிக்கை தொடர்பான இந்திய அரசியலமைப்பின் விதிகள் மற்றும் பல்வேறு மாநிலங்கள் மற்றும் மையத்தின் தற்போதைய சட்டங்கள், உத்தரவுகள், கொள்கைகளை ஆராய்ந்து பொருத்தமான சட்ட கட்டமைப்பை பரிந்துரைத்தல்.

எதிர்காலத்தில் ஆணவக் கொலைகளைத் தவிர்க்க பொருத்தமான தடுப்பு நடவடிக்கைகளை பரிந்துரைத்தல் மற்றும் ஆணவக் கொலைகளைத் தடுக்க பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான செயல் திட்டத்தை பரிந்துரைத்தல். குறிப்பிட்ட, நிலையான மற்றும் செயல்படுத்தக்கூடிய பரிந்துரைகளை உருவாக்கி 3 மாதங்களுக்குள் அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஒன்றிய பா.ஜ.க. அரசின் சூழ்ச்சியால் நடைபெறும் எஸ்.ஐ.ஆர்–ஐக் கண்டித்து

# நெல்லை சந்திப்பு ரயில் நிலையம் முன்பு 'இந்தியா' கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

## இரா.ஆவுடையப்பன் தலைமை! மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. – ம.கிரகாம்பெல் முன்னிலை!

நெல்லை, நவ. 14 -

தேர்தல் ஆணையத்துடன் கூட்டணி அமைத்து ஒன்றிய பா.ஜ.க அரசின் சூழ்ச்சியால் நடைபெறும் (S.I.R.) எதிராக ஆர்ப்பாட்டம் இந்தியா கூட்டணி கட்சி சார்பில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தை கொண்டு வந்துள்ளதை கண்டித்து நெல்லை ஒருங்கிணைந்த மாவட்டம் நெல்லை சந்திப்பு ரெயில் நிலையம் முன்பு நெல்லை மேற்கு மாவட்டம் பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் ஆகியோர் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சுமார் 2000 பேர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பொருளாளர் ரூபி மனோகரன் எம். எல்.ஏ. முன்னாள் அமைச்சர்கள் பூங்கோதை ஆலடி அருணா,மைதீன் கான்,

மாநகர பொறுப்பாளர்கள் மேற்கு சுப்பிரமணியன், கிழக்கு தினேஷ், மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், முன்னாள் எம்பி ஞானதிரவியம், முன்னாள் எம்எல்ஏ மனோஜ் பாண்டியன், மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம்,மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன்,ஏ.எல்.எஸ். லெட்சுமணன், பேச்சிபாண்டியன், சித்திக், பொதுக்குழு உறுப்பினர்கள் முன்னாள் மேயர் சரவணன்,பரமசிவ அய்யப்பன்,நடராஜன்,

கனகராஜ், சாந்தி சுபாஷ், ராமச்சந்திரன், பொறியாளர் அணி ராஜவர்மன்,

மாநில சட்டத்துறை துணைச் செயலாளர் ராஜா முகம்மது, மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ், தர்மன், கிரிஜா குமார், நம்பி, மைக்கேல், தமயந்தி, பிரபு, பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், சங்கர், நமச்சிவாயம், வழக்கறிஞர் சங்கர், அண்டன் செல்லதுரை, துபாய் சாகுல், சாமுவேல், அணி அமைப்பாளர்கள் வில்சன் மணித்துரை, கருப்பசாமி கோட்டையப்பன், செல்வ சூடாமணி

பொன்னையா பாண்டியன், பிரேம் ஆனந்த், காமினி தேவன், பலராமன், ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன், அருள்மணி, மாரியப்பன், அலெக்ஸ் அப்பாவு,கண்ணன், சுபாஷ் தங்க பாண்டியன், போர் வெல்கணேசன், செல்வகருணா நிதி, ராஜன், பரணி சேகர், முத்துப்பாண்டி, ஜெயக்குமார், நகர செயலாளர்கள் மணி சூரியன்,கணேசன், பிரபாகரன்,பொருளாளர் வண்ண சேகர், பூக்கடை அண்ணா துரை,காசி மணி, மீரான்மைதீன்,அலிஃப் மீரான், சௌந்தரம் முத்துராஜ்,அனிதா,ரேவதி அசோக்,ராஜகுமாரி,மல்லிகா அருள், அனுராதா, எல்.ஐ.சி பேச்சிமுத்து,தவசி ராஜன்,மண்டலத் தலைவர்கள் பிரான்சிஸ், ரேவதி, கதிஜா இக்லாம் பாசிலா, மகேஸ்வரி,மாமன்ற உறுப்பினர்கள் கந்தன்,ரம்சான்அலி, சகாய ஜூலியட்,அலி சேக் மன்சூர் சின்னத்தாய் கிருஷ்ணன்,மன்சூர், மாரியப்பன்,பிரபா சங்கரி,உலகநாதன், கழக நிர்வாகிகள் எல்ஜசி பேச்சிமுத்து, தவசி ராஜன்,இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பாட்டபத்து முகம்மது அலி உள்பட பேரூர் கழக,கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,சார்பு அணி நிர்வாகிகள்,மற்றும் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் உட்பட சுமார் 2000 பேர் பங்கேற்றனர்.





சென்னை புரசைவாக்கம் மதராஸ் கேரள சமாஜத்தில் இந்தியன் லிபர்ட்டி காங்கிரஸ் சார்பில் 4 வது ஆலோசனை குழு கூட்டத்தில் இரா. கிரிராஜன் எம்.பி. தொடங்கிவைத்து உரையாற்றினார். இதில் நூலக வளர்ச்சி, வாசிப்பு பழக்க மேம்பாடு, மற்றும் தகவல் பரிமாற்றம் தொடர்பாக விரிவான ஆலோசனைகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் கேரள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் சிவதாசன் மற்றும் கர்நாடகா காங்கிரஸ் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எல். ஹனுமந்தையா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





திருவள்ளூர் மாவட்டம் இரா.கி.பேட்டை ஒன்றியம் வெள்ளாத்தூர் ஏரியின் உபரி நீர், அதன் கொள்ளளவை மீறி நிரம்பி வெளியேற்றப்பட்டு, வயல்வெளிகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளின் மீது சென்றதால் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகினர். இதுகுறித்து தகவல் அறிந்த மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ உடனடியாக அதிகாரிகளை தொடர்பு கொண்டு ஏரியின் உபரி நீர் கால்வாய் வழியாக வெளியேற்ற வழிவகை செய்தார். இதனால் அந்த கிராம மக்கள் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர் உடன் ஒன்றிய கழகச் செயலாளர் பா.சம்பத், நிர்வாகிகள் நாகப்பன், நவீன்குமார், சதீஷ், திருநாவுக்கரசு, உள்பட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளனர்